பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 08 சனிக்கிழமை 24.08.2024 கதிர் 290

## ரூ. 21 கோடி பெறுமதியான 'ஹசீஸ்' பொதி மாட்டியது

### சந்தேகநபர் ஒருவரும் கைது

இத்தாலியிலிருந்து கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்ட பரிசுப் பொதியிலிருந்து 30 கிலோ ஹசீஸ் போதைப் பொருளைத் தமது அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர் என்று இலங்கை சுங்கத்தின் ஊடகப் பேச்சாளரான சீவலி அருக்கொட தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட ஹசீஸ் போதைப் பொருளின் பெறுமதி 21 கோடி ரூபாய்க்கும் அதிகம் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த ஹசீஸ் போதைப்பொருள் மத்துகம பிரதேசத்தில் உள்ள முகவரி ஒன்றிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் சீவலி ☞ 8

## ஒற்றையாட்சியின் தோல்வியை ஏற்று சமஸ்டிக் கட்டமைப்பை ஏற்படுத்துக

### ரணிலுக்கு கஜேந்திரன் அழுத்தம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் ஒற்றையாட்சிக் கட்டமைப்பின் தோல்வியை ஏற்றுக்கொண்டு சமஷ்டிக் கட்டமைப்பைக் கொண்டு வர வேண்டும். உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் மக்களுக்கு பாதிப்பு வரும் என்று தெரியாமல் தான் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்து இருக்கின்றதா என்ற கேள்வி நிலவுகிறது.

அப்படியென்றால் தேர்தல்கள் ஆணைக்குழு பொறுப்பற்று செயல்படுகிறது என்று ரணில் விக்கிரமசிங்க செல்ல வருகிறார் என்ற கேள்வி இங்கே காணப்படுகிறது.

ரணில் விக்கிரமசிங்க நேர்மையானவராக இருந்தால் இலங்கையின் ஒற்றையாட்சிக் கட்டமைப்பின் தோல்வியை ஏற்றுக் கொண்டு சமஷ்டிக் கட்டமைப்பைக் கொண்டு வர வேண்டும். இதனை மக்களுக்கு வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். ☞ 8

## இது ரகசியம் அல்ல!

சில பல மாதங்களுக்கு முன்னர் வரைக்கும் தமிழ் கட்சிகளை ஒற்றுமையாக ஓரணிப்படுத்தும் முயற்சி என்ற வகையில் இந்தியத் தூதரகம் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை எல்லாம் ஒன்றாகவே சந்தித்து வந்தது. அதற்கு முன்னர் ஒவ்வொரு கட்சிகளாகச் சந்தித்து வந்த தூதரகத்தினர் பின்னர் எல்லாக் கட்சித் தலைவர்களையும் ஒன்றாகவே சந்தித்தனர்.

இந்தியாவில் இருந்து அரசியல் தலைவர்கள் வந்தால் அவர்களுடனான சந்திப்புக்களுக்கும்கூட தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளின் தலைவர்களுக்கு ஒன்றாகவே அழைப்புவிடுக்கப்பட்டது. கடைசியாக இந்திய அயலுறவுத் துறை அமைச்சரின் வருகையின் போதும்கூட எல்லாக் கட்சியினருக்கும் சேர்த்தே அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவரும் தற்போதைய நிலையில் இந்தியத் தூதரகம் அந்த அணுகுமுறையைக் கைவிட்டு விட்டது போலுள்ளது. இப்போதெல்லாம் கட்சிகளைச் சார்ந்தவர்களைத் தனித் தனியே ☞ 2

## அரச ஊழியர்களுக்கு 2025 ஜனவரி முதல் 24% சம்பள அதிகரிப்பு

### அடிப்படைச் சம்பளம் 57,500; சஜித் அறிவிப்பு

அரச ஊழியர்களுக்கு 2025 ஜனவரி முதல் சம்பளத்தை 24% ஆக அதிகரித்து அரச ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற 17,800 வாழ்க்கைச் செலவு கொடுப்பனவை 25000 வரை அதிகரிப்போம். அனைத்து அரச ஊழியர்களின் குறைந்த பட்ச அடிப்படைச்சம்பளம் 57500 ரூபாவாக அதிகரிக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.



ஐக்கிய மக்கள் சக்தியின் ☞ 2

## கிளப் வசந்த கொலை சந்தேகநபர் கைது

கிளப் வசந்தவைச் சுட்டுக்கொன்ற சந்தேகநபரைத் தாங்கள் கைது செய்துள்ளனர் என்று பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

31 வயதான பெட்டி எரம்பகே அஜித் ரோஹன என்ற நபரே தெஹிவளை, கௌடான நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துருகிரிய பிரதேசத்தில் வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்த மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களை பஸ்ஸில் கதிர்காமத்திற்கு அழைத்துச் சென்ற நபரான 29 வயதுடைய தாருகார வருண இந்திக்க டிசில்வா என்ற சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவிற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொஹான் பிரேமரத்னவின் பணிப்புரையின் கீழ், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன அல்விஸ் தலைமையிலான குழுவினர் இந்த கைதை செய்துள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து ரி 56 ரக துப்பாக்கி, 120 தோட்டாக்கள் மற்றும் 9 மி.மீ பிஸ்டல் தோட்டாக்களும் இதன் போது கைப்பற்றப்பட்டதாக கூறப்படுகிறது.

## வயிற்றை நிரப்பவேண்டும் இதுதானே மக்கள் தேவை

### கேட்கிறார் ரணில் விக்கிரமசிங்க



வயலையும் நிரப்பினோம். சமையல் அறையும் நிரப்பினோம். இதுதானே மக்களின் தேவை? என்று தெரிவித்தார் ஜனாதிபதி ரணில்.

மட்டக்களப்பு ஏறாவூர் அஹமட் பரீட் விளையாட்டரங்கில் வியாழக்கிழமை மாலை நடைபெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தெரிவித்ததாவது:

மக்கள் உணவு இல்லாமல் இருந்தார்கள். விவசாயம் செய்ய முடியாமல் இருந்தார்கள். உரம் இருக்க ☞ 8

## தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட பன்னிரு நாடுகளுக்கு அழைப்பு

இம்முறை ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்கு 12 நாடுகளுக்கு அழைப்புவிடுத்திருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் செப்டெம்பர் 21 நடைபெறவுள்ள நிலையில், வழமை போன்று இம்முறையும் தேர்தல் கண்காணிப்புப் பணிகளை முன்னெடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக் குழுவினால் விடுக்கப்பட்ட உத்தியோகபூர்வ ☞ 8

## திராவிடர் கழக தலைவர் வீரமணி யாழ். வருகை

தமிழ்நாட்டை ஆளும் திராவிடக் கட்சிகளுக்கு எல்லாம் மூலாதாரமாக தாய்வீடாக விளங்கிய பெரியாரின் திராவிடர் கழகத்தின் தற்போதைய தலைவர் கி.வீரமணி

இந்தியாவின் தமிழ் நாட்டில் உள்ள கட்சியான திராவிடர் கழகத்தின் தலைவர் கி.வீரமணி யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ☞ 8

## சுமந்திரன், சாணக்கியன் போன்ற சிலரே தமிழ் பொது வேட்பாளரை எதிர்க்கின்றனர்

### சுரேஸ் பிரேமசந்திரனின் விளக்கம் இது

சுமந்திரன், சாணக்கியன், சிவஞானம் போன்ற சிலரே பொது வேட்பாளரை எதிர்க்கின்றனர் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவாக கிளிநொச்சியில் பரப்புரைய ஆரம்பித்து வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தெரிவித்ததாவது:

தமிழ்ப் பொது வேட்பாளருக்கு தமிழ் அரசுக் கட்சியில் மிகப் பெரும்பாலானவர்கள் ஆதரவாக இருக்கின்றார்கள். சுமந்திரன், சாணக்கியன், ☞ 2

## பதவி துறந்த எம்.பியான தலதா வடிப்பது முதலைக் கண்ணீர்

### ஐக்கிய மக்கள் சக்தி போட்டுத் தாக்கு

ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து வெளியேறி சஜித் பிரேமதாச தலைமையில் கட்சி அமைப்பதற்கு முக்கிய காரண கர்த்தாவாக இருந்தவரான தலதா அத்துகோரள தற்போது கட்சி பிளவுபட்டுள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாது என முதலைக்கண்ணீர் வடிக்கிறார். ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தியை ☞ 2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

சந்தித்துத்துத்தான் பேசுகிறார் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா. இன்னும் சொல்லப்போனால் கட்சிகளைத் தனித் தனியே பிரித்துச் சந்திப்பது மட்டுமல்ல ஒரு கட்சியையே பிரித்துப் பிரித்துத் தனித்தனியேசந்தித்துவருகின்றார்.

நேற்று அவர் தமிழ் அரசுக் கட்சியின் கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களான சாணக்கியன் மற்றும் கலையரசன் ஆகியோரைச்சந்தித்தார். ஜனாதிபதித் தேர்தலையொட்டியே அவர்கள் பேசினார்கள். கிழக்குத் தமிழ் மக்களின் நிலையை இவர்கள் மூலம் நாடிபிடித்தறிவதுதான் இந்தச்சந்திப்பின் முக்கிய நோக்கம். இன்னும் சொல்லப்போனால் தமிழ் பொது வேட்பாளர் விடயம் தொடர்பில் கிழக்கில் ஏதாவது சலசலப்பு இருக்கின்றதா, எந்த வேட்பாளர் இந்தத் தேர்தலில் வெல்வதற்கான வாய்ப்புக்கள் உண்டு என்பன குறித்தும் ஒரு கருத்துக்கணிப்பை பெறுவதுதான் இத்தகையசந்திப்புக்களின்நோக்கம்.

தமிழ் அரசுக் கட்சியைச்சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை இவ்வாறான சந்திப்புக்கு இந்தியத் தூதுவர் அழைப்பு விடுத்திருப்பது இது மூன்றாவது சந்தர்ப்பம். முதலில்சுமந்திரனுடனான சந்திப்பு, இரண்டாவதாக சிறீதரன் சார்ள்ஸ் நிர்மலநாதனுடன்சந்திப்பு. இப்போது மூன்றாவதாக சாணக்கியன், கலையரசனுடன் சந்திப்பு.

தமிழ் அரசுக் கட்சிக்குள் எப்படியான அணிகள் அல்லதது பிளவுகள் உள்ளன, இவற்றை எப்படிக் கையாள வேண்டும் என்பது வேறு யாரையும்விட இந்தியாவிற்குத்தான் நன்றாகத் தெரிந்திருக்கிறதுபோலும். போகட்டும் விடுங்கள் இதுவொன்றும் புதிய விடயமல்லவே.

இந்தியாவை நாங்கள் கையாளவேண்டும்என்றுதமிழ்த் தலைவர்கள் கதறுவதும், இந்தியா இவர்களைத் தன் இஷ்டத்திற்குக் கிள்ளுக்கிரைகளாகக்கையாள்வதும் எப்போதும் நடப்பதுதான். அதன் ஒவ்வொரு காட்சியையும் நாம் அவ்வப்போது இப்படிக் கண்டுகொள்ள வேண்டியதுதான்.

.................................

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் 28 நாட்களே இருக்கும் நிலையில் நீர்க் கட்டணங்கள் 7 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளன. அதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. ஓகஸ்ட் 21 முதல் இந்தக் கட்டணக் குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபையின் அறிவிப்புப்படி, விலைச்சூத்திரத்தின் அடிப்படையில், வீட்டு நீர் நுகர்வோரின் கட்டணம் 7 சதவீதமும், அரசு மருத்துவ மனைகளுக்கு 4.5 சதவீதமும், கோவில்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கு 6.3 சதவீதமும் குறைக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஒட்டு மொத்த குடிநீர் கட்டணத்தை 5.94 சதவீதம் குறைக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இந்தகுடிநீர்கட்டணதிருத்தத்தின் கீழ்மாதாந்திரசேவைக்கட்டணத்தில் எந்ததிருத்தமும்செய்யப்படவில்லை.

தேர்தல் காலத்தில் இத்தகைய அறிவிப்புக்கள் விதி மீறல்களா இல்லையாஎன்கிறசர்ச்சைஒருபுறம் இருக்க, தேர்தல் திணைக்களம் தலையிட்டு இனி இந்தக் கட்டணக் குறைப்பை செப்டெம்பர் 21க்கு பின்னர் ஒத்தி வைத்தாலும்கூட, இந்த அறிவிப்பால் ரணிலுக்குக் கிடைக்கக்கூடிய பலாபலன்களை அதனால் தடுத்து நிறுத்திவிட முடியாது.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தொடர்பில் நான் சொல்ல வந்த விடயமே வேறு. அதற்குள் ஒரு கொசுறுத் தகவலாகத்தான் இந்தநீர்க்கட்டணக் குறைப்பு, அதுவும் தேர்தல் காலத்தில் வந்திருப்பது குறித்துத் தெரிவித்தேன். முக்கியமானவிடயம் என்னவென்றால்

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபைவசம்இருந்த பல மில்லியன் ரூபா பெறுமதி யான நீர் மீட்டர்கள் காணாமல் போய்விட்டனவாம். இது தொடர்பில் தாம் விசாரணைகளைத் தொடக்கி யிருக்கின்றனர் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் வணிகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர், கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றிற்கு அறிவித்தி ருக்கின்றனர்.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் சிசிர குமார ஜயவீர செய்த முறைப் பாட்டின் அடிப்படையில் உரிய விசாரணை நடத்தப்பட்டு வருவதா கவும் நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட் டிருக்கின்றது. திருட்டுப்போனது கொஞ்சநஞ்சப் பெறுமதியான மீற்றல்கள் அல்ல. 51 கோடி 36 இலட்சத்து 44 நாலாயிரத்து 500 ரூபாய் (513,644,500) பெறுமதியான நீர் மீற்றர்களே காணாமற்போயுள்ளனவாம்.

என்னதான் நடந்திருக்கும்? கட்டணக்குறைப்புக்குஇப்படியும்ஒரு வழியைத் தேடியிருப்பார்களோ..?

**இடிமின்னல்**

## 2025...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்தாவது தேர்தல் பரப்புரைக் கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்றுப் பிற்பகல் வரகாபொல நகரில்வெகுசிறப்பாகஇடம்பெற்றது. ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் போலவே அப்பகுதியை சேர்ந்த ஏராளமான மக்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். இந்த மக்கள் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தற்பொழுது காணப்படுகின்ற வரிக் கொள்கையினால் அரச ஊழியர்கள் உட்பட தொழிலாளர் வர்க்கமேபெரும்அழுத்தங்களுக்கு உள்ளாகி இருக்கின்றது. தற்பொழுது அரச ஊழியர்களில் பெரும்பாலானவர்களின் சம்பளத்திற்கு அறவிடப்படுகின்ற வரி 24% வரை குறைக்கப்படும்.

அரச ஊழியர்களுக்குத் தற்போது மாதாந்த கொடுப்பனவுகள் மாத்திரம் வழங்கப்படுவதோடு மேலதிக வருமானங்கள் இல்லை. சம்பளத்திற்கான வரி அளவிடப்படுகின்ற போது அவர்களால்சிறந்த அரசசேவையை வழங்கக்கூடிய மனநிலை கிடைப்பதில்லை. அதனால் நாம் இந்த சலுகைகளை வழங்க நடவடிக்கை எடுப்போம். இதற்கு மேலதிகமாக அரச சேவையை நவீன மயமாக்கி ள-ஸ்ரீலங்கா,

ஈ--கவர்ன்மென்ட் வேலை திட்டங்களின் ஊடாக சிறந்த அரச நிர்வாகத்தையும், சிறந்த பயிற்சிகளையும்வழங்கநடவடிக்கை எடுக்கப்போம்.

அரச ஊழியர்களின் பிள்ளை களுக்கு கல்வியும் பாதுகாப்பும் வழங்கப்படும். இவை வாக்கு றுதிகள் அல்ல. நாட்டை கட்டியெ ழுப்புவதற்கான திட்டங்கள்.

நாட்டையும் அதிகாரத்தையும் கைப்பற்ற விரும்புகின்ற மத நம்பிக்கையற்றவர்மதஉரிமைக்கும் அழுத்தம் விடுகின்றார்.

புத்தசாசன அமைச்சின் ஊடாக கிராமங்களிலும் சந்திகளிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ள புத்தர் சிலைகளை கணக்கெடுக்க நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்த ஆளும்தரப்பின் அனுமதியைப் பெற்றே இது நடந்து வருகிறது. இதே கணக்கடுப்பு ஏனைய இனங்களுக்கும் வரலாம். ஏனைய இனங்களில் மதஸ்தானங்களை கணக்கெடுக்கும் நிலை ஏற்படலாம்.

இன்று பௌத்த தர்மத்திற்கே இவ்வாறான ஆணைகளை பிறப்பிக்கின்றனர். நாளை ஏனைய மதங்களுக்கும் அழுத்தங்களை கொடுக்கலாம். மக்களின் மத உரிமையை இல்லாமல்செய்கின்ற முயற்சி இது.

எனது தந்தை புத்த சாசன அமைச்சையும் ஏனைய மதங்க ளுக்கான தனித் தனி அமைச் சுக்களையும்உருவாக்கினார். இன்று தற்போதைய அரசாங்கமும் ஆட்சி அதிகாரத்தை பெற முற்படுகின்ற மதசார்பற்றவர்கள் மதங்களைப் பின்பற்றும் உரிமையை இல்லாத செய்ய முற்படுகின்றனர். இந்த வெட்கங்கெட்ட செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம்.

ஐக்கிய மக்கள் சக்தி ஆளும்தரப்பில் எந்த மதத்தையும் பின்பற்றுவதற்கு உரிமை உண்டு. இந்தகணக்கெடுப்பைமேற்கொண்டு மதங்களைவிட்டு மக்கள் தூர விலகும் நிலையை தோற்றுவிக்க நடவடிக்கை எடுத்து வரும் அரச அதிகாரிகளுக்கு எதிராக எமது ஆட்சியில் உரிய நடவடிக்கை எடுப்போம் என்றார்.

## சுமந்திரன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிவஞானம் போன்ற ஒரு சிலரைத் தவிர கட்சியின் ஏனைய மேல் மட்டங்களும்சரி, ஏனையகட்சியின் கீழ் மட்ட தொண்டர்களும் சரி பொது வேட்பாளர் வெற்றி பெற வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள்.

அது மாத்திரமல்ல, அவர்கள் களத்தில் இறங்கி பணிபுரிவதற்கும் தயாராக இருக்கின்றார்கள். யாழ்ப்பாணத்தில் தமிழ் அரசுக்கட்சியினுடைய இளைஞர் அணியைச்சேர்ந்தபலரைச்சந்தித்து நான் பேசியிருக்கின்றேன்.

தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை முன்னெடுக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றார்கள். கிளிநொச்சியைச் சேர்ந்த சிறிதரனும் பொது வேட்பாளரை வாழ்த்தியிருக்கிறார். ஏற்கனவே அதற்கான கூட்டங்களும் - கிளிநொச்சியில் கூடப்பட்டிருக்கின்றன.

அதேபோல தமிழ் அரசுக் கட்சியின் தலைவராக இருக்கின்ற சேனாதிராஜாவும் இதனை வரவேற்றிருக்கின்றார். ஆகவே தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த பெரும்பான்மையானோர் இதனை ஆதரித்து வரவேற்றிருக்கிறார்கள்.

ஒரு சிலர் தங்களுடைய சொந்தக் காரணங்களுக்காக இவ்வாறு எதிர்க்கின்றனர். குறிப்பாக சொல்லப் போனால், இலங்கை ஆளும்தரப்புப் பெருந்தொகைப் பணத்தை அபிவிருத்திக்காக தனக்கு கொடுத்ததாக சாணக்கியன் கூறியிருக்கின்றார். ஆகவே, வாங்கிய பணத்துக்கு பேச வேண்டும்என்றநிலைக்குஅவர்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும்எனஅவர்கள் யோசித்தால், அதற்காக அவர்கள் சில நல்ல முடிவுகளை எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

கடைசி நேரத்தில் அவர்கள் என்ன முடிவு எடுப்பார்களோ என்று எனக்கு தெரியாது. தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிராக இவர்கள் முடிவு எடுப்பார்களாக இருந் தால் அது தமிழ்த் தேசியத்துக்கு எதிரான முடிவாகத்தான் இருக்கும் - என்றார்.

## பதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டுச் செல்வதன் மூலம் அவர் சஜித் பிரேமதாசவுக்கு முதுகில் குத்தியுள்ளார் என முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள நாடாளுமன்றத்தில் விசேட உரையொன்றை ஆற்றிவிட்டுத் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை விட்டுச்சென்றமை தொடர்பில்அவர்நேற்றுக்காட்டமான விமர்சனங்களை முன்வைத்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசிய கட்சிக்குள் தலைமை பதவி தொடர்பில் பிரச்சினை வந்தபோது, சஜித் பிரேம தாசவுக்கு தலைமை பதவி வழங்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தவர்களில் தலதாவும் ஒருவர். ஐக்கிய தேசிய கட்சியில் சஜித் பிரேமதாசவுக்கு தலைமை பதவி கிடைக்காத நிலையில் கட்சியில் இருந்து வெளியேறி, சஜித் பிரேமதாச தலைமையில் புதிய கட்சி ஒன்றை உருவாக்கவும் அவர் முன்னிருந்து செயற்பட்டார். அதனால் நாடாளுமன்றத்தில் அவர் தெரிவித்த கருத்து பொய் என்பதை அவரின் மனசாட்சி சொல்லும்.

ஐக்கிய தேசிய கட்சியை பிளவுபடுத்தி, தற்போது தலைவர்கள் இரண்டுபேரும் இரண்டு முனைகளில் போட்டியிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவிப்பது, புதுமையாகஇருக்கிறது. ரணில்விக்ரமசிங்கதனதுஜனாதிபதி கனவுக்காக, ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கை, சின்னம் என அனைத்தையும்விட்டு, இனவாதிகளுடனும், திருடர்களுடனும் கைகோர்த்துக்கொண்டுள்ளார்.

அதேபோன்று மஹிந்தானந்த, பிரசன்ன ரணதுங்க, ராஹித்த அபேகுணவர்த்தன போன்றவர்கள் தங்களின் தலைவர் மஹிந்த ராஜபக்ச என்றே தற்போதும் தெரிவிக்கின்றனர். அவ்வாறு இருக்கும்போது ரணில் விக்ரமசிங்கவுடன் நாங்கள் எவ்வாறு கைகோர்த்துக்காள்ள முடியும் என கேட்கிறோம்.

அதேபோன்று ஐக்கிய மக்கள் சக்தியுடன்தற்போதுமோசடிக்காரர்கள் இணைந்துகொண்டுள்ளனர் தெரிவித்திருந்தார். எங்களுடன் இணைந்துகொண்டுள்ளவர்களில் யாருக்காவது மோசடி குற்றச்சாட்டு இருக்கிறதா? அல்லது நீதிமன்றத் தால்குற்றவாளிகள்எனதீர்ப்பளிக்கப் பட்டவர்கள் இருக்கின்றார்களா என கேட்கிறோம்.

தலதா தெரிவிக்கும் மோசடிகாரர்கள் அனைவரும் ரணில் விக்ரமசிங்கவுடனே இருக்கிறனர். மஹிந்தானந்த அளுத்கமகே 'டொப் டென்' என பத்து பேரின் பெயரை குறிப்பிட்டு எமது அரசாங்கத்தில் இருந்த அமைச்சர்களுக்கு எதிராக மோசடி குற்றச்சாட்டு தெரிவித்து வந்தார். அந்த 10 பேரில் தொடக்கத்தில் இருந்ததே தலதா அத்துகோரளவின் பெயராகும். தலாதா மோசடிகாரர் என குற்றஞ்சாட்டிய மஹிந்தானந் தவும் தற்போது ரணில் விக்ரமசிங் கவுடனேயே இருக்கிறார்.

கடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி தனித்து போட்டியி டும்போது தலதா அத்துகோரள ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்டே வெற்றிபெற்றார். அப்போது கட்சி பிளவுபடுவதை கண்டுகொள்ளாத அவர் தற்போது ஐக்கிய தேசிய கட்சி பிளவுபட்டிருப்பதாக முதலைக்கண்ணீர் வடிக்கிறார் என்றார்.

வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்தின்
நல்லூர் உற்சவகால
பணிமனையில் பகுதிநேர
வேலைவாய்ப்புகள்!
பல்கலைக்கழக
மாணவர்களுக்கு
முன்னுரிமை.



தொடர்புகளுக்கு: 0777 920 384

GOODGIFT PROPERTY DEVELOPERS (PVT) LTD
LONG LIFE CARE (PVT) LTD
GREEN MEDIA HOUSE (PVT) LTD
SEMBA SERVICES (PVT) LTD

காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டின் மாறிமாறி வந்த எட்டு ஜனாதிபதிகளும் தமிழர்களைத் தொடர்ந்து ஏமாற்றியே வந்தனர்

## ஸ்ரீநேசன் காட்டம்

இந்நாட்டில் 8 ஜனாதிபதிகள் தேர்தல்கள் மூலமாகப் பதவிக்கு வந்தார்கள். இவர்கள் சிங்கள மக்களுக்கான சிங்கள ஜனாதிபதிகளாகவே நடந்து கொண்டார்கள். தமிழர்களுக்கு மேலதிகமாகப் பிரச்சினைகளை உருவாக்கினார்களேயன்றி இனப்பிரச்சினையைத் தீர்க்கவில்லை என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று (வெள்ளிக்கிழமை) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறுகையில் -

இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பு இலங்கையில் 1978 இல் அறிமுகம் செய்யப்பட்டது. அதன் பின்னர் இந்நாட்டில் 8 ஜனாதிபதிகள் தேர்தல்கள் மூலமாகப் பதவிக்கு வந்தார்கள். இவர்கள் சிங்கள மக்களுக்கான சிங்கள ஜனாதிபதிகளாகவே நடந்துகொண்டார்கள். தமிழர்களுக்கு மேலதிகமாக பிரச்சினைகளை உருவாக்கினார்களேயன்றி, இனப் பிரச்சினையைத் தீர்க்கவில்லை.

அந்த வகையில், 46 ஆண்டு காலமாக மக்களால் தெரிவுசெய்யப்பட்ட 8 ஜனாதிபதிகளும் இடைக்காலத்துக்காக பாராளுமன்றத்தால் தெரிவு செய்யப்பட்ட இரு ஜனாதிபதிகளும் தமிழர்களை ஏமாற்றியுள்ளனர்.

தற்போது அதிகாரத்திலுள்ள ஜனாதிபதி ரணில், கல்முனை வடக்குப்பிரதேசசெயலகம், மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரைப் பிரச்சினைகளைக் கூட தீர்க்கவில்லை. இதற்கான மக்களின் அறவழிப் போராட்டத்தை அவர் மதிக்கவில்லை.

இப்போது கூட அவரால் அப்பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். சட்டவிரோதமாக குடியேறிய அயல் மாவட்டக் குடியேறிகளைக் கூட ஜனாதிபதியால் வெளியேற்ற முடியவில்லை.

மேலும், இனப்பிரச்சினைக்கான நிரந்தர தீர்வுக்கான திட்டம் ரணில், சஜித், அநுர ஆகியோரிடம் இல்லை.

இப்படியிருக்க, அதனை நன்கறிந்த பின்பும் சில்லறையான சலுகைகள் அல்லது எதிர்காலத் தனிப்பட்ட தேவைகள் அல்லது நட்புக்காக தமிழர்கள் எந்த வகையில் வாக்களிக்க முடியும்.

இவர்கள் ஜனாதிபதியானால் தரக்கூடியது இருவர் அல்லது மூவருக்கான அமைச்சர், இராஜாங்க அமைச்சர் பதவிகள் மட்டுமேதான். அதன் பின்னர் கூட்டுப் பொறுப்பு என்ற கட்டுக்குள் இருந்துகொண்டு தலையாட்டிக்கொண்டு, ஸ்ரீலங்கா அரசுக்காகவும், அந்த அரசாங்கத்துக்காகவும் செயற்படவே முடியும்.

வடக்கு, கிழக்கு தமிழர்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றிச் சிந்திக்கவும் முடியாது. செயற்படவும் முடியாது.

தமிழர் விடுதலை இயக்கங்களில் இருந்து ஸ்ரீலங்கா தேசிய கட்சிகளுடன் இணைந்து கொண்ட டக்ளஸின் ஈ.பி.டி.பி, பிள்ளையானின் த.ம.வி.பு கட்சி என்பவற்றால் வடக்கு, கிழக்கு மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் எதனையும் செய்ய முடியவில்லை.

அதையும் விட சாதாரண கல்முனை வடக்குப் பிரதேச செயலகம், மேய்ச்சல் தரைப் பிரச்சினைகளைக் கூடத் தீர்க்க முடியவில்லை.

இப்படியான நிலையில் தனிப்பட்டவர்களின் அமைச்சர் கனவுகள்நிறைவேறுமேயன்றிதமிழர்களின்எப்பிரச்சினையும் தீராது என்பதே வரலாற்றுப் படிப்பினையாகும் எனத் தெரிவித்தார். (05)

# தமிழக திராவிடர் கழகத் தலைவர் வீரமணி குடாநாட்டுக்கு வருகை



இந்தியாவின் தமிழ்நாட்டில் உள்ள கட்சியான திராவிடர் கழகத்தின் தலைவர் கி.வீரமணி யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ளார்.



யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த வீரமணியை இலங்கை தமிழ் அரசு கட்சிதலைவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மற்றும் அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையினர் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.



இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி வகித்த முதலாவது தமிழர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 97ஆவது பிறந்தநாள் நினைவுப் பேருரை இன்று (சனிக்கிழமை) பிற்பகல் 3 மணிக்கு யாழ். நகரில் அமைந்துள்ள றிம்மர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்காகவே தமிழக அரசியல்வாதியும் திராவிடர் கழகத் தலைவருமான கி.வீரமணி யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ளார்.

அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் ஓய்வுநிலை மேல்நீதிமன்ற நீதிபதி இ.த.விக்கினராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கி.வீரமணி நினைவுப் பேருரை நிகழ்த்தவுள்ளார்.

அத்தோடு, சிறப்புரையை தென்னிந்தியத் திருச்சபையின் ஆயர் கலாநிதி வி.பத்மதயாளன் ஆற்றவுள்ளார்.(05)

# ஜனாதிபதி தேர்தலின் பின்னர் உள்ளூராட்சி தேர்தல் நீதிமன்றத்தின் தீர்ப்பு மக்களிற்குக் கிடைத்த வெற்றி

## மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு



ஜனாதிபதி தேர்தலிற்கு பின்னர் உள்ளூராட்சி தேர்தல் இடம்பெறும் என முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய எதிர்வுகூறியுள்ளார்.

உள்ளூராட்சி தேர்தல்கள் குறித்து உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை மக்களிற்கு கிடைத்த வெற்றி என மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தலை தாமதப்படுத்தியது தவறான நடவடிக்கை என தெரிவித்துள்ள அவர் நீதிமன்றம் இதனை உறுதி செய்துள்ளமை நீதியை நோக்கிய முக்கியமான நடவடிக்கை எனத் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தின் இந்த தீர்மானம் ஆச்சரியமளிக்கும் ஒன்றல்ல என தெரிவித்துள்ள அவர் தேர்தல்களை பிற்போடுவது ஒத்திவைப்பது மக்களின் உரிமைகளை மீறும் செயல் என நீதிமன்றம் தொடர்ச்சியாக தெரிவித்துவந்துள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

தாமதமானாலும் இறுதியாக நீதிநிலைநாட்டப்பட்டுள்ளது என நான் கருதுகின்றேன். ஜனாதிபதி தேர்தல் முடிவடைந் ததும் தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளூராட்சி தேர்தல்களை நடத்தும் என நான் எதிர்பார்க்கின்றேன். - என மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். (05)

# வீட்டுக்கதவை உடைத்துப் பொருள்கள் திருட்டு: தங்க நகை, போதைப்பொருளுடன் நபர் கைது

மிரிஹானபொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றின் கதவை உடைத்து பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றதாக கூறப்படும் சந்தேக நபரொருவர் நுகேகொடை பொலிஸ் குற்றப்புலனாய்வுபிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நுகேகொடை பொலிஸ் குற்றப்புலனாய்வுபிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் மிரிஹான பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிருலப்பனை, கொழும்பு 05 பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 02 கிராம் 110 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள், திருடப்பட்டதாககூறப்படும்தங்கஆபரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக மிரிஹானபொலிஸ்நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் மிரிஹான பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.(05)

# காப்பகத்திலிருந்து காணாமல்போன நான்கு சிறுவர்களும் மீட்கப்பட்டனர்

வெல்லவாய, எல்ல பிரதேசத்தில் உள்ள சிறுவர் காப்பகம் ஒன்றிலிருந்து காணாமல் போயிருந்த நான்கு சிறுவர்களும் அலவ்வ பிரதேசத்தில் வைத்து வெள்ளிக்கிழமை காலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என அலவ்வ பொலிஸார் தெரிவித்தனர்.

16,14 மற்றும் 15 வயதுடைய நான்கு சிறுவர்களே இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில்தெரியவருவதாவது- இந்தசிறுவர்கள்நால்வரும்அலவ்வ பிரதேசத்தில் உள்ள சிறுவனொருவரது வீட்டிற்குச் சென்றுள்ளனர்.

இதன்போது, அந்த சிறுவனின் தாய் இது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து, சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் நான்கு சிறுவர்களையும் பாதுகாப்பாக மீட்டுள்ளனர் என அலவ்வ பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# ஓய்வுபெற்றுள்ள ராணுவ மேஜரின் வீட்டிலிருந்து தோட்டாக்கள் மீட்பு

மத்துகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தம்பரெட்டிய பகுதியில் உள்ள ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் ஒருவரின் வீட்டிலிருந்து தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டுள்ளனஎனகுற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் குறித்த வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் அலுமாரி ஒன்றில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்தத் தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்டதாகக் கூறப்படும் 22 வகையான 253 தோட்டாக்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இது ஒரு நல்ல அறிகுறி

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி யாழ்ப்பாணம் வந்திருக்கிறார். தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவருமான அமிர்தலிங்கத்தின் நிகழ்வில் சிறப்புரையாற்றுவதற்காக அவர் அழைத்து வரப்பட்டிருக்கின்றார். பலாலி விமான நிலையம் ஊடாக அவர் நேற்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார்.

தந்தை பெரியாரால் உருவாக்கப்பட்டது திராவிடர் கழகம். அதுவே தமிழ்நாட்டின் ஆட்சி அதிகாரத்தைப் பின்னாளில் பிடித்த திராவிடர் முன்னேற்றக் கழகத்தின் தாய். அதிகாரம் இன்றி மக்கள் இயக்கங்களால் ஒரு கட்டத்திற்கு மேல் மக்கள் பணியாற்ற முடியாது என்கிற கொள்கையில் பெரியாருடன் முரண்பட்டுக்கொண்டு திமுகவைத் தொடக்கினார் அறிஞர் அண்ணா. தமிழ்நாட்டின் திமுக ஆட்சியைப் பிடித்தத்தில் இருந்து இன்றுவரை திமுக மற்றும் அதிலிருந்து பிரிந்த அண்ணா திராவிடர் முன்னேற்றக் கழகம் (அதிமுக) ஆகிய இரு கட்சிகளே மாறி மாறி ஆட்சியைப் பிடித்து வந்திருக்கின்றன.

இந்தத் திராவிடக் கட்சிகளின் சமத்துவம், சமூகநீதி ஆகிய அசைக்கமுடியாத கொள்கைகளின் வழியேதான் இந்தியாவின் வடக்கு மாநிலங்கள் பலவற்றையும்விட தமிழ்நாடு இன்று முன்னிலையில் திகழ்கின்றது. அந்தக் கொள்கைகளின் அத்திவாரம் திராவிடர் கழகத்திலிருந்தே வந்தது. தந்தை பெரியாரின் மாணவரும், தோழருமாக இருந்தவரான வீரமணிதான் கழகத்தின் நீண்ட காலத் தலைவராக இருந்து வருகின்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமிர்தலிங்கத்துடனும் மிக நெருக்கமாக அன்பு பாராட்டிவந்தவர். ஆயுதக் குழுக்களின் வளர்ச்சிக்கு முன்புவரை தமிழ்நாட்டுக்கும் ஈழத் தமிழ்த் தலைவர்களுக்கும் இடையில் இருந்த நெருக்கமான தொடர்புகளின் சான்றாகவும் ஈழத் தமிழர் முல் பரிவும் பாசமும் கொண்ட தலைவராகவும் விளங்குகின்றவர் வீரமணி. அதுமட்டுமல்ல தமிழ்நாட்டின் ஆட்சியாளர்களுடனும் மிக நெருக்கமான உறவைப் பேணுபவர். இன்றைய திமுக ஆட்சியாளர்கள் மத்தியிலும் அவருக்குப் பெரும் மதிப்பும் செல்வாக்கும் இருக்கின்றது.

அவர் மீண்டும் யாழ்ப்பாணம் வந்திருப்பது, மங்கி மறைந்துபோன தமிழ்நாடு மற்றும் ஈழத் தமிழர் இடையிலான உறவின் மறுமலர்ச்சிக்கான அறிகுறியாகவேபடுகின்றது. தமிழ்நாட்டு மக்கள் ஈழத் தமிழர்களுக்கு எப்போதும் தார்மீக ஆதரவு வழங்கி வந்திருக்கின்றார்கள். அதுபோலவே அதிகாரத்தில் இருந்த திமுக, அதிமுக ஆட்சியாளர்களும் ஈழத்தமிழர்களுக்குத் தார்மீக ரீதியில் ஆதரவளித்து வந்திருக்கிறார்கள். ஆனால் அரசியல் கூட்டுச் செயற்பாடுகள் குறிப்பாக ஆளும் திராவிடர் கழகங்களுக்கும் ஈழத் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் இடையிலான உறவுகளும் அரசியல் கொடுக்கல் வாங்கல்களும் மிகத் தொலைவுக்குச் சென்றுவிட்டன. ஆயுதப் போராட்டக் காலத்தில் நிகழ்ந்த பல்வேறு சம்பவங்கள் இதற்குக் காரணமாக அமைந்தன.

இப்போது போர் முடிவுக்கு வந்து 15 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் ஈழத் தமிழர்களின் அரசியலில் தமிழ்நாட்டின் பங்கும் பணியும் ஆதரவும் ஊக்கமும் தார்மீக ஆதரவைத் தாண்டியும் தேவையாக இருக்கின்றது. உலகத் தமிழர்களின் தாய் நிலமாக இருக்கக்கூடிய தமிழ்நாடு ஈழத் தமிழர்களை மீண்டும் தன்னோடு சேர்த்தணைத்துக்கொள்ளவேண்டிய. அதைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டிய நேரம் வந்திருக்கிறது. வீரமணியின் வருகை அதற்கான வழிவகையை ஏற்படுத்தட்டும். நம்பிக்கை கொள்வோம்.

# வங்கதேச வன்முறை கையாளப்பட்ட விதம்

**கண்ணப்பன்**

அண்மையில் நிகழ்ந்த பங்களாதேஷ் கிளர்ச்சியானது தேர்தல் மூலம் ஜனநாயக அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக மாணவர்களால் இட ஒதுக்கீடு, வேலையில்லா திண்டாட்டம் போன்ற அரசியல், சமூக காரணங்களை முன்னிலைப்படுத்தி நிகழ்த்தப்பட்டது.




இருப்பினும், நடுநிலையுடன் சட்டம்-ஒழுங்கை பராமரிக்க வேண்டிய வங்கதேச காவல்துறையின் ஒருதலைபட்ச செயல்பாடுகளினால் காவல் துறையும் வன்முறை களத்தில் அதிக எண்ணிக்கையிலான உயிர் சேதத்தையும், பொருட்சேதத்தையும் எதிர்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது என்பதை பங்களாதேஷிலிருந்து வெளிவரும் செய்திகள் வெளிப்படுத்துகின்றன.

17 கோடி மக்கள் தொகையை உள்ளடக்கிய வங்கதேசத்தின் சட்டம்- ஒழுங்கு பராமரிப்பு, குற்றத் தடுப்பு, குற்றப் புலன் விசாரணை, போக்குவரத்து ஒழுங்குபடுத்துதல், உள்நாட்டு பாதுகாப்பு உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள இரண்டு லட்சத்திற்கும் சற்று அதிகமான காவல்துறையினரை உள்ளடக்கிய வங்கதேச காவல் அமைப்பில் மொத்தம் 650 காவல் நிலையங்கள் உள்ளன.



அண்மையில் நடைபெற்ற வங்கதேச கிளர்ச்சியின் பொழுது, நாட்டின் பல பகுதிகளில் அமைந்துள்ள 400-க்கும் மேற்பட்ட காவல் நிலையங்கள் முழுமையாக சூறையாடப்பட்டன. காவல் நிலையங்களிலுள்ள பொருட்கள், வழக்கு கோப்புகள், வாகனங்கள் உள்ளிட்டவை தீக்கிரையாயின. காவல் நிலைய பாதுகாப்பு அறைகளில் வைக்கப்பட்டிருந்த துப்பாக்கிகள், தோட்டாகள் வன்முறையில் ஈடுபட்ட கும்பல்களால் எடுத்துச் செல்லப்பட்டன.

வங்கதேசத்தின் தலைநகரான டாக்கா நகரில் அமைந்துள்ள காவல் நிலையங்கள் அனைத்திலும் காவலர் எவரும் இன்றி, செயல் இழந்து காட்சி அளித்தன என்றும், சாலைகளில் போக்குவரத்து காவலர்கள் இன்றி, சாலை போக்குவரத்து சீர் குலைந்து காணப்பட்டன என்றும் தலைநகர் டாக்காவில் செய்தி சேகரித்த செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கிளர்ச்சி நடைபெற்ற நாட்களில் பகல் மட்டுமின்றி, இரவு நேரங்களிலும் கிளர்ச்சியாளர்கள் காவல் நிலையங்கள், காவல் அலுவலகங்கள், காவலர் குடியிருப்புகள் உள்ளிட்ட பகுதிகளில் தொடர் தாக்குதல்கள் நடத்தினர். ஐம்பதுக்கும் மேற்பட்ட காவல் துறையினர் கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்களில் உயிரிழந்துள்ளனர்; பலர் படுகாயம் அடைந்துள்ளனர்.

டாக்கா நகரில் காவல் வாகனம் ஒன்றை கிளர்ச்சியாளர்கள் தடுத்து நிறுத்தி, வாகனத்தினுள் இருந்த காவல்துறையினரைத் தாக்கிய சம்பவம் குறித்தும், மற்றொரு இடத்தில்; தாக்குதலில் இறந்துபோன காவல் அதிகாரி ஒருவரை தலைகீழாகத் தொங்கவிட்டு தங்களது வெறுப்பை கிளர்ச்சியாளர்கள் வெளிக்காட்டிக் கொண்ட சம்பவம் குறித்தும் கலவரப் பகுதிகளில் செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர்கள் விவரித்துள்ளனர்.

நாட்டின் பல்வேறு இடங்களில் கிளர்ச்சியாளர்களின் சீற்றத்திற்கு ஆட்பட்டு, அவர்களிடையே சிக்கித் தவித்துக் கொண்டிருந்த காவலர்களையும், காவல் அதிகாரிகளையும் வங்கதேச ராணுவத்தினர் மீட்டு, பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் சென்றனர். காவல் தலைமையகத்தில் இருந்த காவல் உயரதிகாரிகள் ஹெலிகாப்டர் மூலம் பாதுகாப்பான இடத்திற்கு வெளியேற்றப்பட்டனர்.

வங்கதேச கிளர்ச்சியின் உச்சகட்டத்தின்போது, சிறைகளில் இருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறைவாசிகள் சிறை வார்டன்களைத் தாக்கியும், சிறைச்சாலைகளுக்கு தீவைத்தும் தப்பிச் சென்றுள்ளனர். 2009- ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக வங்கதேசத்தின் பிரதமராக இருந்துவந்த ஷேக் ஹசீனா மற்றும் அவர் தலைமையின் கீழ் செயல்பட்டுவந்த அவாமி லீக் கட்சியினருக்கு எதிராக அரசியல் காரணங்களுக்காக வங்கதேசத்தில் கிளர்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆனால், வங்கதேசத்திலுள்ள பெரும்பாலான காவல் நிலையங்கள், காவல்துறையினர், அவர்களின் குடும்பத்தினர் மீது கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்த வேண்டிய சூழல் ஏற்படக் காரணம் என்ன?

புதிய நாடாக 1971-ஆம் ஆண்டு உருப்பெற்ற வங்கதேசத்தில் காவல் சீர்திருத்தம் என்பது முக்கியத்துவம் பெறப்படவில்லை. 2009-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து பதினைந்து ஆண்டுகள் வங்க தேசத்தை ஆட்சி செய்த ஷேக் ஹசீனா காவல் சீர்திருத்தத்தில் கவனம் செலுத்தவில்லை. உலக நாடுகள் சிலவற்றில் நடைமுறையில் இருந்து வருவது போன்று, வங்கதேசத்திலும் சட்டம் ஒழுங்கை பராமரிப்பதில் நடுநிலையுடன் செயல்படாமல், ஆட்சியாளர்களின் கைப்பாவையாக செயல்படுவதிலு-மே காவல் துறை தன் கவனத்தைச் செலுத்தியது.

வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்னிலைப்படுத்தி, கடந்த சில மாதங்களாக வங்கதேசத்தில் மாணவர்கள் நடத்திய போராட்டங்களை ஒடுக்குவதற்காக சட்ட விதிமுறைகளைப் புறந்தள்ளிவிட்டு, மனிதப்பண்பற்ற முறையில், ஆட்சியாளர்களின் கைப்பாவையாக காவல்துறை செயல்பட்ட விதம் மாணவர்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

ஆயுதங்கள் ஏதுவுமின்றி, தங்களின் போராட்டம் தொடர்பாக சாலை ஒன்றில் முழக்கமிட்டுக் கொண்டிருந்த மாணவர்கள் மீது காவல்துறையினர் துப்பாக்கி சூடு நடத்தியதும், துப்பாக்கி குண்டுகளால் காயமடைந்து, உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த ஒரு மாணவனுக்கு காவல்துறையினர் உதவி எதுவும் செய்யாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததும், அந்த மாணவனுக்கு உதவி செய்யச் சென்ற மற்றொரு மாணவன் மீதும் துப்பாக்கி சூடு நடத்தி அச்சுறுத்தியதும், போராட்ட களத்தில் செய்தி சேகரித்துக் கொண்டிருந்த செய்தியாளர் ஒருவர் அந்த மாணவனுக்கு உதவி செய்ய முயற்சித்ததும், பயனின்று அந்த மாணவன் உயிரிழ்ந்த சம்பவம் தொடர்பான வீடியோ காட்சி மாணவர்கள் மற்றும் இளைஞர்களிடையே வங்கதேச காவல்துறைக்கு எதிரான மனநிலையை ஏற்படுத்தின.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# வங்கதேச வன்முறை கையாளப்பட்ட விதம்

4ம் பக்க தொடர்ச்சி...........



தற்பாதுகாப்புக்காக போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது காவல்துறையினர் துப்பாக்கி சூடு நடத்தினர் என டாக்கா மெட்ரோபாலிடன் காவல்துறை அதிகாரி பி.பி.சி. செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார். ஆனால், காவல்துறை நடத்திய துப்பாக்கி சூட்டில் மாணவர்கள் இறந்துபோன சம்பவங்கள் 'சட்டவிரோதமான கொலைகள்' என்று ஐ.நா. அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஷேக் ஹசீனா பிரதமராக இருந்த காலகட்டத்தில், அதிகார மையத்திற்கு நெருக்கமாக இருந்த சில காவல் அதிகாரிகள் காவல்துறையின் நிர்வாகத்தில் கோலோச்சி வந்தனர். காவல் உயர் பதிவிகளுக்கான பணியிட நியமனங்களையும், பதவி உயர்வுகளையும் அவர்கள்தான் முடிவு செய்தனர். இவர்களின் கருத்துகளுக்கு இணங்காத காவல் அதிகாரிகளில் சிலர் பணிநீக்கம் செய்யப்பட்டனர். மற்றவர்கள் முக்கியத்துவம் இல்லாத பணிகளுக்கு மாற்றம் செய்யப்பட்டனர்.

வங்கதேச காவல்துறையானது ஷேக் ஹசீனா அரசின் அரசியல் விருப்பு, வெறுப்பிற்கிணங்க நீண்டகாலமாக செயல்பட்டு வந்ததின் விளைவாக, காவல்துறை மீது பொதுமக்களிடத்தில் ஏற்பட்டுள்ள அதிருப்தியை வங்கதேச காவல் தலைமையகம் உணரத் தவறிவிட்டது.

ஒரு நாட்டில் 'கையூட்டு கலாசாரம்' எந்த அளவிற்கு வியாபித்துள்ளது என்பதைப் பொறுத்துதான், அந்த நாட்டின் காவல் துறை பொதுமக்களின் மரியாதைக்கு உரியதாக விளங்கும். ஜெர்மனியில் உள்ள பெர்லின் நகரைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டுவரும் 'டிரான்ஸ்பரன்ஸி இன்டர்நேஷனல்' என்ற அமைப்பு ஆண்டுதோறும் 180 உலக நாடுகளில் நிலவிவரும் கையூட்டு மற்றும் ஊழல் குறித்து ஆய்வு மேற்கொண்டு, 'ஊழல் உணர்தல் குறியீடு' எண்ணை அளவிடுகிறது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், 2023-ஆம் ஆண்டிற்கான ஊழல் உணர்தல் குறியீடு எண் தொடர்பான ஆய்வறிக்கையை டிரான்ஸ்பரன்ஸி இன்டர்நேஷனல் வெளியிட்டுள்ளது. அதன்படி, கடந்த பத்து ஆண்டுகளில் வங்கதேசத்தில் கையூட்டு கலாச்சாரம் தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளது என்றும், தற்போதைய ஆய்வின்படி ஊழல் மற்றும் கையூட்டு மிகுந்து காணப்படும் உலகநாடுகளின் பட்டியலில் வங்கதேசமும் இருந்துவருகிறதுஎன்றும்அந்தஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. வங்கதேசத்திலுள்ள ஊழல் தடுப்பு ஆணையத்தின் செயல்பாடுகளில் அரசியல் மற்றும் அதிகார வர்க்கத்தின் தலையீடு மிகுந்து காணப்படுகிறது என்றும் அந்த ஆய்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வாழ்வுரிமைக்காக நடத்தப்படும் போராட்டங்களை சட்ட விதிகளுக்கு ஏற்ப எதிர்கொள்ள வேண்டும் என்ற புரிதல் வங்கதேச காவல்துறையிடம் இல்லாத காரணத்தால், வங்கதேச காவல்துறை எதிர்கொண்ட உயிரிழப்புகள், பொருட்சேதங்கள் ஏராளம். உயிர் பாதுகாப்புக்காக காவல் நிலையங்களில் இருந்து தப்பியோடிய காவல்துறையினர், பணியாற்ற மீண்டும் காவல் நிலையங்களுக்குத் திரும்பி வருவதற்கான மன தைரியமின்றி, தலைமறைவாக இருந்து வருகின்ற துர்பாக்கிய நிலை வங்கதேச காவல்துறையில் நிலவிவருகிறது.

வங்கதேச காவல்துறையின் பண்புகளில் பலவற்றை நம்நாட்டு காவல் துறையும் கடைபிடித்து வருவதைக் காணமுடிகிறது. குறிப்பாக, ஆட்சி பொறுப்பில் இருக்கும் அதிகார மையத்தின் விருப்பத்திற்கு இணங்கச் செயல்படுகின்ற மனப்பான்மை நம்நாட்டு காவல்துறையில் அதிகரித்து வருகிறது. லஞ்ச கலாசாரமும் காவல்துறையில் அதிகளவில் நிலவிவருகிறது.

சமுதாய மாற்றங்களுக்கு இணங்க தன்னை சீர்படுத்திக் கொண்டு, சட்ட விதிகளுக்கு உட்பட்டு சட்டம்-ஒழுங்கை பராமரிக்கும் பணியில் காவல் துறை ஈடுபட வேண்டியதன் அவசியத்தை வங்கதேச வன்முறைகள் உணர்த்துகின்றன.

# 15 வயது சிறுமி துஸ்பிரயோகம்: தாயும் மகனும் கைது

*15 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய காதலனும் அவருக்கு உதவி செய்ததாகக் கூறப்படும் காதலனின் தாயாரும் கைது செய்யப்பட்டுள்ளனத் என அநுராதபுரம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.*

*இராஜாங்கனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் காதலனும் அவனது தாயாருமே கைது செய்யப் பட்டுள்ளனர்.*

*இது தொடர்பில் தெரியவருவதாவது -*

*பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளான சிறுமி அநுராதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தனது தாயாருடன் வசித்து வந்துள்ளார்.*

*இந்நிலையில், இந்த சிறுமிக்கும் சிறுமியின் தாயாருக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் கோபமடைந்த சிறுமி, தனது தாயாரிடம் கூறாமல் வீட்டை விட்டு வெளியே சென்று தனது காதலனின் வீட்டில் தங்கியிருந்துள்ளார்.*

*இதனையடுத்து, சிறுமியின் தாயார் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.*

*அதன் அடிப்படையில் விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் சிறுமியின் காதலனின் வீட்டுக்குச் சென்று சிறுமியை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.*

*அங்கு சிறுமியிடம் நடத்தப்பட்ட விசாரணையின் ஊடாக சந்தேக நபரான காதலன் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய விடயம் தெரியவந்துள்ளது.*

*இதனையடுத்து, சந்தேக நபரான காதலனும் அவருக்கு உதவி செய்ததாகக் கூறப்படும் காதலனின் தாயாரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*கைதான இருவரும் அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் அநுராதபுரம் தலைமையக பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (05)*

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்ஹிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



காலைக்கதிர்
Kalaikkathir



காலைக்கதிர் Kalaikkathir

# லொறி வீதியை விட்டுவிலகி ஹப்புத்தளையில் விபத்து

ஹப்புத்தளை வியாரகலை பகுதியில் லொறியொன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாக ஹப்புத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை சுமார் 3 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

ஹப்புத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பதுளை - கொழும்பு பிரதான வீதியில் ஹப்புத்தளைக்கும் பெரகலைக்கும் இடைப்பட்ட வியாரகல பகுதியில் இந்த லொறி வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஹப்புத்தளை பகுதியில் நிலவும் அதிகளவிலான பனி மூட்டம் காரணமாக இந்த விபத்துஇடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் ஊகிக்கின்றனர்.

ஹாலிஎல பகுதியில் இருந்து மீரிகம செல்லும்போதே இந்த லொறி விபத்துக்குள்ளானதாகவும் லொறியில் சாரதி மாத்திரமே பயணித்ததாகவும் சாரதி சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# மோட்டார் சைக்கிள் – சைக்கிள் மோதி விபத்து: இளைஞன் சாவு

## மூவர் காயம்

புத்தல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெல்லவாய - மொனராகலை பிரதான வீதியில் பெல்வத்தை பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் காயமடைந்துள்ளனனனர் என புத்தல பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிள் மற்றும் துவிச்சக்கர வண்டி ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின்போது, மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் துவிச்சக்கர வண்டியில் பயணித்த இருவரும் விபத்தில் சிக்கி படுகாயமடைந்து, புத்தல பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர், மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

23 வயதுடைய இளைஞரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, துவிச்சக்கர வண்டியில் பயணித்த இருவரும் மேலதிக சிகிச்சைக்காக மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் புத்தல பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.(05)

# வவுனியா வைத்தியசாலையில் உயிரிழந்த சிசுவின் உடல் யாழ். போதனாவுக்கு கொண்டுவரப்பட்டது

## சட்டத்தரணி திருவருள் தெரிவிப்பு

வவுனியா வைத்தியசாலையில் இறந்த சிசுவின் உடல் மருத்துவ பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக சிரேஸ்ட சட்டத்தரணி தி. திருவருள் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

வவுனியா வைத்தியசாலையில் மரணமடைந்த சிசுவின் உடலை யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு கொண்டுசென்று மருத்துவ பரிசோதனை செய்வதற்கு ஏற்பட்ட இழுபறி நிலைமை தொடர்பில் பொலிஸார் நீதிமன்றத்தில் நகர்த்தல் பத்திரம் மூலமாக தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட சிசுவின் சார்பில் நான் இன்றைய தினம் ஆஜராகி சிசுவின் சடலத்தை யாழ். வைத்தியசாலைக்கு மருத்துவ பரிசோதனைக்காக கொண்டுசெல்வதில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலைமை தொடர்பில் கௌரவ மன்றுக்கு தெளிவுபடுத்தியிருந்தேன்.

கௌரவ மன்று குறித்த விசாரணையில் மிகவும் உன்னிப்பாகவும் அவதானத்துடனும் செயற்பட்டு குறித்த சிசுவின் உடலினை யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கு உரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு கூறியதன் பிரகாரம் வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் அன்ரன் புனிதநாயகம் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் ஊடாக ஒழுங்குபடுத்தி தந்திருந்தார்.

சிசுவின் சடலத்தினை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசென்று ஒப்படைப்பதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம், மன்றானது குறித்த சிசுவின் மரண விசாரணையை திறம்பட செய்யுமாறும் அதனுடைய அறிக்கையினை எதிர்வரும் ஒன்பதாம் மாதம் நான்காம் திகதி அல்லது அதற்கு முன்னர் கௌரவ மன்றிலே சமர்ப்பிக்க வேண்டுமென பொலிஸாருக்கு கட்டளையிடப்பட்டுள்ளது.

மேலும் சிசுவின் உடலினை நீதிமன்றத்தின் கட்டளையின் பிரகாரம், யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் வைக்குமாறும் மன்றின் கட்டளை இல்லாமல் சிசுவினுடைய உடலில் எவ்வித செயல்பாடுகளும் மேற்கொள்ளாமல் கவனமாக வைக்குமாறும் பொலிஸாருக்கு கட்டளை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த மருத்துவ அறிக்கையிலே திருப்தியின்மை காணப்படுமாக இருந்தால் மேலதிக மருத்துவ பரிசோதனை தொடர்பாக வேறு இடங்களுக்கு மாற்றம் செய்து மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டும் என்பது தொடர்பிலும் மன்று உத்தரவாதம் வழங்கியுள்ளது. - என்றார். (05)

# சட்டவிரோத வைத்திய நிலையமொன்றை நடத்தி வந்த ஆயுர்வேத வைத்தியர் கைது

சட்டவிரோதமான முறையில் மேற்கத்திய வைத்திய நிலையமொன்றை நடத்திவந்ததாகக் கூறப்படும் ஆயுர்வேத வைத்தியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என ஓயாமடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் ஓயாமடுவ பொலிஸார் ஆகியோருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அனுராதபுரம், ரம்பேவ பிரதேசத்தில் கடமையாற்றும் ஆயுர்வேத வைத்தியர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மகாவிலச்சிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட மானிங்கமுவ பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் மேற்கத்திய வைத்திய நிலையமொன்றை நடத்தி வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, இந்த வைத்தியசாலைக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதாக அநுராதபுரம் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

(05)



காலைக்கதிர் Kalaikkathir

## வயிற்றை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. எரிபொருள் இருக்கவில்லை. டீசல் இருக் கவில்லை. விவசாயம்செய்யமுடியாது. வாகனம் ஓட்டமுடியாது. பொருளாதாரம்வீழ்ச்சியடைந்தது. உணவு, மருந்துகள் இருக்கவில்லை. மக்கள் கஷ்டத்தில் வாழ்ந்தனர். நான் ஜூலை மாதம் ஆட்சியைப் பொறுப்பேற்ற போது உரத்தை வழங்கி விவசாயம் செய்வதற்குவாய்ப்பளிக்கவேண்டும் என்று நான் தீர்மானித்தேன்.

ஐந்து போகங்களும் விதைக்கப்பட்டன. ஒரு முறைகூட கைவிடப்படவில்லை. வயலையும் நிரப்பினோம். சமையல் அறையும் நிரப்பினோம். இதுதானே மக்களின் தேவை. எரிபொருள்வழங்கினோம். மருந்துகள் இருக்கின்றன. தேவையான அனைத்துப் பொருட்களும் இருக்கின்றன.

பொருளாதாரம் எழுச்சி பெறுகிறது. சுற்றுலாப் பயணிகளும் வருகின்றனர். வியாபாரமும் தடையின்றிநடக்கிறது. பொருட்களின் விலைகளும் குறைந்துள்ளன. இன்னும் குறைக்கவேண்டும் என்று கோருகின்றனர். அதனை ஏற்றுக்கொள்கிறேன். மக்கள்மிகவும் கஷ்டப்படுகின்றனர். இன்னும் பொருட்களின் விலைகளைக் குறைக்கவேண்டும். ரூபாவை வலுப் பெறச் செய்யவேண்டும்.

நான் பொறுப்பேற்கும் போது டொலர் ஒன்றின் விலை 370 ரூபாவாகும். தற்போது 300 ரூபா வரை குறைந்துள்ளது. மொத்த தேசிய உற்பத்தி 2019ஆம் ஆண்டு 89 பில்லியன் டொலர்களாக இருந்தது. ஆனால் நான் பொறுப்பேற்ற போது 76 பில்லியன் டொலர்களாக குறைந்திருந்தது. ஆனால் 2023ஆம் ஆண்டின் இறுதியில் அது 84 பில்லியன் டொலர்களாகஅதிகரித்துள்ளது. எமது மொத்தத் தேசியஉற்பத்திஅதிகரித்து, பணவீக்கம் குறைந்து பொருட்களின் விலைகளும் குறைந்தன.

இன்னும் நிவாரணத்தை எதிர்பார்த்துள்ளீர்கள். அதனைஎப்படி வழங்கலாம்? தேசிய உள்நாட்டு உற்பத்தியை 89 பில்லியன் டொலர்களாக அதிகரிக்க வேண்டும். பணவீக்கத்தை 9 வீதமாக குறைக்க வேண்டும். ரூபா அப்போது இன்னும் வலுப்பெறும். ரூபா வலுப்பெற்றால் அதிக பொருட்களை வாங்க முடியும். மொத்த தேசிய உற்பத்தியை 92 பில்லியன் டொலர்களாக உயர்த்தினால் ரூபா மேலும்வலுப்பெறும். பொருட்களின் விலைகள் குறையும். யாருக்கு இந்த இலக்கை அடைய முடியும்?

உள்நாட்டுஉற்பத்தியையாரால் அதிகரிக்க முடியும். சஜித்தினால் முடியுமா? அநுரவினால் முடியுமா? அவர்களால் முடியாது. எதற்காக வாக்கு கோருகின்றனர்? அவர்கள் நேரத்தை வீணடிக்காது வீட்டில் இருக்கவேண்டும். வாய்ப்புகொடுத்த போது ஓடிவிட்டார்கள்.

இவர்களால் ஒரு நாட்டை நிர்வகிக்க முடியுமா? மக்கள் கஷ்டப்பட்டபோது தப்பியோடிவிட்டார்கள். எனக்கு ஒரேயொரு ஆசனம்தான் இருந்தது. எனினும், மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அதனால் நான் இதனைஏற்றுக்கொள்கிறேன்என்று கூறி இதனை ஏற்றுக்கொண்டேன். எமது வீடுகளிலும் குறைபாடுகள் இருந்தன. ஆனால் கஷ்டம் இருக்கவில்லை. ஆனால் நாட்டு மக்கள் கஷ்டப்பட்டனர்.

முச்சக்கரவண்டியொன்றைஓட்ட முடியாமல் கஷ்டப்பட்டனர். நீங்கள் இந்தக்கஷ்டத்தைஅனுபவித்தீர்கள். இவற்றைப் பார்த்தும் ஏன் இந்தத் தலைவர்கள் அனுதாபம் கொள்ளவில்லை. ஆளும்தரப்பைப் பொறுப்பேற்கச் சொன்னபோது தப்பியோடிவிட்டார்கள். நான் பொறுப்பேற்றேன். நான் துரோகி என்று என்னைத் திட்டுகின்றனர். திருடர்களை பாதுகாப்பதாகஅவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

உங்களின் சமையல் அறை, பணப் பை, வீட்டில் இருந்த நிலை குறித்து அவர்கள் சிந்திக்கவில்லை. சமுர்த்தி வழங்க பணமில்லை என்றார்கள். சமுர்த்திக்குப் பதிலாக அஸ்வெசும மூலம் மூன்று மடங்கு வழங்கினேன்.

24 லட்சம் பேருக்கு அஸ்வெசும வழங்கினேன். உலக வங்கி எங்களுக்கு உதவியது. சில உதவிகள் தாமதமாகியுள்ளன. குறைந்தவருமானம்பெறுவோருக்கு 10 கிலோ அரிசியை தலா இரண்டு மாதங்களுக்கு வழங்கினோம். பாடசாலை மாணவர்களுக்கு உணவுகளை வழங்கினோம். வேறு என்ன செய்யவேண்டும்?

முதியோருக்கானகொடுப்பனை அதிகரித்தேன். இவற்றை செய்ய ஏன் அவர்கள் என்னுடன் ஒன்றுசேரவில்லை. மக்களுடன் அவர்களுக்கு கோபம் இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். அநுரகுமாரவிற்கும், சஜித் பிரேமதாசவிற்கும் நீங்கள் ஏதாவது பிழை செய்துள்ளீர்களா? ஏன் அவர்கள் உதவ முன்வரவில்லை?

உங்களின் பிரச்சினைகளைப் பற்றி அவர்கள் சிந்திக்கவில்லை. தங்களின் பிரச்சினைகளைப் பற்றி மட்டுமே சிந்தித்தார்கள். இதனைச் செய்யமுடியாது. இது தோல்வியடைந்தால் தங்களின் பெயர் கெட்டுவிடும் என்று நினைத்தார்கள். தற்போது எமது முயற்சி வெற்றியளித்துள்ளது. அவர்களின்பெயர்கள்கெட்டுவிட்டன.

அவர்களுக்காகவாவாக்களிக்கப் போகிறீர்கள்? நான் 'உறுமய' காணி உறுதிப்பத்திரங்களை வழங்கினேன். கொழும்பில் குறைந்தவருமானம்பெறுவோருக்கு அவர்கள் வசிக்கும் அடிக்குமாடிக் குடியிருப்புக்களின் உரிமைகளை வழங்கினோம். மலையகத்தில் கிராமங்களைஉருவாக்கி, வீடுகளை வழங்குவோம்.

ஏன் அவர்கள் இவற்றை செய்ய முன்வரவில்லை? ஏன் அவர்கள் இவற்றை முன்மொழியவில்லை? ஏன் அவர்கள் இதுபற்றிப் பேசுவதில்லை? மக்கள்வாழ்வதற்கு காணி இருக்கவேண்டும். கோரளைப்பற்று உள்ளிட்ட இந்தப் பிரதேசத்திலும் பிரச்சினைகள் இருக்கின்றன. நெருக்கடிஇல்லாமல் காணிகளை அடையாளம் கண்டு காணிகளை வழங்க எமது புதிய ஆட்சியில் நடவடிக்கை எடுப்போம்.

முஸ்லிம் மக்களுக்கு அநீதி ஏற்பட்டது. முஸ்லிம்களின் ஜனாசாக்கள் நல்லடக்கம் செய்ய முடியாமல் தகனம் செய்யும் நிலை ஏற்பட்டது. இவ்வாறானதொரு நிலை மீண்டும் ஏற்படாதிருக்க நான் புதிய சட்டமொன்றைக் கொண்டுவருகின்றனர்.

விரும்பியோர் நல்லடக்கம் செய்யவும், தகனம் செய்யவும், விரும்புவோர் உடலை மருத்துவ பீடத்திற்கு ஒப்படைக்கவும் முடியும். அமைச்சர் அலி சப்ரி இந்தச் சட்டத்தை அமைச்சரவைக்கு கொண்டுவந்த பின்னர் நாம் வர்த்தமானியில் வெளியிடுவோம்.

ஏன்சஜித், அநுரஇவ்வாறானசட்டமூலத்தை கொண்டுவரவில்லை? எந்தவொரு உறுப்பினரும் இந்த சட்டமூலத்தைக் கொண்டுவந்திருக்கலாம். இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கவும் குழுவொன்றைநியமிக்கவுள்ளேன். கடந்த ஆட்சிக் காலத்தில் இது நிகழ்ந்திருந்தாலும் இந்தச் சம்பவத்திற்கு ஆளும்தரப்புஎன்றரீதியில்முஸ்லிம் மக்களிடம்மன்னிப்புகோருகிறோம்.

சஜித், அநுர இவ்வாறு செய்வார்களா? நாம் முன்நோக்கிச் செல்லவேண்டும். இன்னும் சில வருடங்கள் தேவைப்படுகின்றன. எங்களுக்கு உதவிகள் தேவை. ஐ.எம்.எப், 17 நாடுகள், சீனா ஆகிய தரப்பினருடன் கதைத்து உதவிகளைப் பெற்றுள்ளேன். இன்று உடன்பாட்டிற்கு வந்துள்ளோம். இதனை மீறினால் நிதி கிடைக்காது. சஜித் அநுர, இந்த உடன்படிக்கைகளில் மாற்றம் செய்வோம் என்று கூறுகின்றனர்.

அவ்வாறு செய்தால் டொலர் மீண்டும் 370 ரூபாவரைசெல்லும். ஆற்றில்விழுந்துசாகச்சென்றவரை காப்பாற்றி மீண்டும் கரைக்குக் கொண்டுவந்த பின்னர் மீண்டும் ஆற்றில் குதிப்பதா? அவர்கள் அதனைத்தான் செய்வதாகச் சொல்கிறார்கள். நாம் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும்.

இங்குள்ளவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை வழங்க வேண்டும். இது ஆரம்பம் மட்டுமே. நாம் முன்நோக்கிப்பயணிக்கவேண்டும். அதனால் தான் இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறேன். உங்களின் எதிர்காலத்தை பற்றி சிந்தியுங்கள். இதனைபாதுகாத்துக்கொள்ளகேஸ் சிலிண்டருக்கு வாக்களிக்குமாறு கோருகிறேன். அல்லது கேஸ் சிலிண்டர் இன்றி வாழ நேரிடும் என்றார்.

## ஒற்றையாட்சியின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறுஎதுவும்தெரிவிக்காமல் ஒற்றையாட்சிக்குள் இந்த நாட்டை கட்டியொழுப்புவேன்என்பதுஎல்லாம் எமாற்று நடவடிக்கை மீண்டும் அதிகாரத்தில் அமர்வதற்கான முயற்சி. இவர்களால் இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியாது என்றார்

## தேர்தல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைப்பை ஐரோப்பிய ஒன்றியம் ஏற்றுக்கொண்டிருந்தது.

அதன்படி இம்மாதத் தொடக்கத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும், ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையில் இதுகுறித்த நிர்வாகமட்ட உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கு மட்டுமன்றி இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், பாகிஸ்தான், மாலைதீவு உள்ளிட்ட 12 நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொதுநலவாய நாடுகளின் தேர்தல் கண்காணிப்பாளர்களும், ஆசிய தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பின் பிரதிநிதிகள் குழுவும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்காக நாட்டுக்கு வருகைதரவிருப்பதாகவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

## திராவிடர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீரமணியை இலங்கை தமிழ் அரசு கட்சி தலைவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மற்றும்அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையினர் பலாலி விமான நிலையத்தில் வரவேற்றுபொன்னாடைபோர்த்திக் கௌரவித்தனர்.

இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி வகித்த முதலாவது தமிழர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 97ஆவது பிறந்தநாள் நினைவுப் பேருரை இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். நகரில் அமைந்துள்ள றிம்மர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அதில் சிறப்புரையாற்றுவதற்காகவே வீரமணி யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் ஓய்வுநிலை மேல்நீதிமன்ற நீதிபதி இ.த.விக்கினராசா தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. சிறப்புரையினை தென்னிந்தியத் திருச்சபையின் ஓய்வு நிலை ஆயர் கலாநிதி வி.பத்மதயாளன் ஆற்றவுள்ளார்.

(மற்றொரு செய்தி 3ம் பக்கத்தில்..)

## ரூ. 21 கோடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அருக்கொட தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருளுடன் சந்தேகநபரும் மேலதிக விசாரணைகளுக்காக போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.







## உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் ஒருவர் கைது

மொனராகலை, தம்பகல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அலுகல்கே பகுதியில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேக நபர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் வியாழக்கிழமை கைது செய்யப் பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்ப டையினருக்குக்கிடைத்ததகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் அலுகல்கே, மாரிஅராவ பிரதேசத்தை சேர்ந்த 44 வயதுடையவர் ஆவார்.

இதனையடுத்து, சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக தம்பகல்ல பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் தம்பகல்ல பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (05)

## நான்கு கிலோ கஞ்சாவுடன் மெதகமவில் ஒருவர் கைது

மெதகமபொலிஸ்பிரிவுக்குட்பட்ட தலாவபிரதேசத்தில்கஞ்சாபோதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படை யினரால் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படை யினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில்சந்தேகநபர்கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் மெதகம பிரதேசத்தைசேர்ந்த30வயதுடைய நபரொருவரே ஆவார்.

சந்தேகநபரிடம்இருந்து04கிலோ 430கிராம்கஞ்சாபோதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதையடுத்து, கைதான நபர் மேலதிக விசாரணைகளுக்காக மெதகம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக் கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் மெதகம பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (05)

## ஒரு வயதுகுழந்தை குடாநாட்டில் காய்ச்சலால் பரிதாபகரமாக சாவு

*யாழில் காய்ச்சல் காரணமாக ஒரு வயதுக் குழந்தை ஒன்று பரிதாபமாக உயரிழந்துள்ளது.*

*தம்பாட்டி,ஊர்காவற்துறை பகுதியைச் சேர்ந்த ஒரு வயதுடைய குழந்தையே உயிரிழந்துள்ளது.*

*இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -*

*குறித்த குழந்தைக்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ள நிலையில் 21ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் குழந்தை சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளது.*

*இருப்பினும் சிகிச்சை பலனின்றி குழந்தை 21ஆம் திகதி இரவு 11 மணியளவில் உயிரிழந்துள்ளது.*

*குழந்தையின்சடலம்மீதான மரணவிசாரணைகளை திடீர் மரண விசா ரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண் டுள்ளதோடு, காய்ச்சல் காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.(05)*



காலைக்கதிர் Kalaikkathir

# கிளிநொச்சி இரத்தினபுரத்தில் கட்டட வேலையில் ஈடுபட்ட தொழிலாளர் சடலமாக மீட்கப்பட்டார்



கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் கட்டடவேலையில் ஈடுபட்டு வந்த தொழிலாளர் ஒருவர் நேற்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேல்மாடிகட்டடத்தின்இரண்டாம்மாடியில்நேற்று இரவுஇருவர்வெல்டிங்வேலைசெய்துகொண்டிருந்த நிலையில் ஒருவர் நித்திரைக்கு சென்றிருந்தார். மற்றவர் வேலை செய்து கொண்டிருந்ததாகவும் அதிகாலைஎழுந்துமற்றவரைகாணாதுதேடியபோது சடலமாக கீழே காணப்பட்டார் என பொலிஸாருக்கு தெரிவித்திருந்தார்.

குறித்த சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.குறித்த சம்பவத்தில் யாழ்ப்பாணம் ஊர்காவற்துறையைச்சேர்ந்த 34வயதுடைய சின்னாண்டிபரமேஸ்வரன் என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்துள்ளார். (05-113)

# மனைவி குத்திக் கொலை கணவன் உடன் கைது

## இரத்தினபுரியில் சம்பவம்

இரத்தினபுரி, நிவித்திகல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தேல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்த குற்றச்சாட்டில் கணவன் கைது செய்யப்பட்டுள்ளார் என நிவித்திகல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

நிவித்திகல, தேல பிரதேசத்தில் வசிக்கும் 38 வயதுடைய மனைவியே கொலை செய்யப்பட்டுள்ளார்.

குடும்பத் தகராறு காரணமாக இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தாக்குதலின் போது 18 வயதுடைய மகனும் படுகாயமடைந்துள்ள நிலையில் இரத்தினபுரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, சந்தேக நபரான 48 வயதுடைய கணவன் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிவித்திகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# ரணில் பக்கம் தாவினார் அங்கஜன் இராமநாதன்





ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இரு முக்கியஸ்தர்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான அங்கஜன் இராமநாதன் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பதில் பொதுச் செயலாளர் சாரதி துஷ்மந்த ஆகியோரே ஜனாதிபதி ரணிலுக்கு தமது ஆதரவை வழங்குவதாக உறுதியளித்துள்ளனர்.

இந்தஇருவரும்ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து தங்களது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# கூரிய ஆயுதம் காட்டி அச்சுறுத்தி கொள்ளையடித்து வந்தவர் கைது

கூரிய ஆயுதங்களை காட்டி அச்சுறுத்தி வாடகைக்கு செல்வதாக கூறி ஓட்டோக்கள், ஆபரணங்கள் உள்ளிட்டசொத்துக்களைகொள்ளையடித்த சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வெலிக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அருணோதய மாவத்தையில் வைத்துஇவர்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் இராஜகிரிய ஒபேசேகரபுர பகுதியைச் சேர்ந்த 27 வயதுடையவராவார்.

குறித்த சந்தேக நபர் பேலியகொட, களனி, கடவத்தை, பொரள்ளை மற்றும் மிரிஹான ஆகிய பகுதிகளில் முச்சக்கர வண்டிகள் , கையடக்கத் தொலைபேசிகள், தங்க ஆபரணங்கள் போன்றவற்றை கொள்ளையடித்துள்ளதாகவிசாரணைகளில்இருந்து தெரியவந்துள்ளது.

கொள்ளையிடப்பட்ட பொருள்கள்சில தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும்,இந்தசம்பவம்தொடர்பான விசாரணைகளை மேல் மாகாண தெற்கு குற்றப்புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மாதவிடாய் தொடர்பிலான மாணவருக்கு செயலமர்வு



(எம்.எப். றிபாஸ்)

விழுது நிறுவனம் மற்றும் ஐடோ இளையோர் அமைப்பு இணைந்து ஒழுங்கட்டப்பட்ட 'மாணவ பாய்அணிஆடைதயாரித்தல்சம்பந்தமாகவும், இவ்விழிப்புணர்வு செயலமர்வு இடம்பெற்றது.ஹாலிஎல வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக கேட்போர்





சமூகத்தினரின் மாதவிடாய், சுகாதார உரிமைகளுக்காய் எங்கள் குரல்' எனும் தொனிப்பொருளில் மாணவர்களுக்கு செயலமர்வு நடத்தப்பட்டது.

பதுளை பிரதேசத்திலுள்ள மூவின சமூகத்தையும்சேர்ந்தமாணவிகளுக்கே மேற்படிமாணவிகளுக்குமாதவிடாய்மற்றும் சுகாதாரம் தொடர்பிலும், மாதவி கூடத்தில் அமைப்பின் உத்தியோகத்தர் பாலசிங்கம்முரளிதரன்தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாடசாலைகளின் அதிபர்களான ஆர்.ராஜி வகாந்தி, ஏ.எம். றிஸ்வான், ரீ.எம்.ஏ. தென்னக்கோன் உட்பட பெற்றோர்கள், ஆசிரியைகள், என பலரும் கலந்து கொண்டனர். (05)

# தேர்தல் செலவினங்களை சமர்ப்பிக்காத வேட்பாளரினது குடியுரிமை இரத்தாகும்

## 3 ஆண்டுகளுக்கு

ஜனாதிபதி தேர்தல் வாக்கெடுப்புநிறைவடைந்து 21நாள்களுக்குள் தேர்தல் பிரசார செலவினங்கள் தொடர்பான உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களை சமர்ப்பிக்காத வேட்பாளர்களின் குடியுரிமை 3 ஆண்டுகளுக்குஇரத்துசெய்யப்படும்எனதேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் 39 ஜனாதிபதிவேட்பாளர்கள்போட்டியிடுகின்றநிலையில், வியாழக்கிழமைஜனாதிபதிவேட்பாளரான ஐதுரூஸ் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# கதிர்காமம் பிரதேசத்தில் பாடசாலை அதிபர் கைது

## மாணவர் துஸ்பிரயோகம் காரணம்

கதிர்காமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் உள்ள பாடசாலையொன்றில் கல்வி கற்கும் இரண்டு மாணவர்களை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக கூறப்படும் பாடசாலை அதிபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என கதிர்காமம் பொலிஸார் தெரிவித்தனர்.

கதிர்காமம் பொலிஸாருக்கு வியாழக்கிழமை கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

49 வயதுடைய பாடசாலை அதிபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

08 மற்றும் 09 ஆம் வகுப்புகளில் கல்வி கற்கும் இரண்டுமாணவர்களைபாலியல்துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

சந்தேக நபரான அதிபர் கடந்த 2021 ஆம் ஆண்டில் ஒரு மாணவனையும், 2023 ஆம் ஆண்டில் மற்றைய மாணவனையும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளனார் என இந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இரு மாணவர்களும் விளையாட்டு செயற்பாடுகளுக்காக பாடசாலைக்கு சென்றிருந்த போதுஉணவுஉண்பதற்குஒதுக்கிவைக்கப்பட்டுள்ள அறையொன்றிற்குள் வைத்து இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார் என இந்த முறைப்பாட்டில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளைகதிர்காமம்பொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# மனதிலுள்ள அகப்பேய்கள் அகற்றப்படல்வேண்டும் சமயம் முதுகெலும்பு இங்கு இறைநம்பிக்கை அதிகம்

## தஞ்சாவூர் இ.கி.மி. சுவாமி விமூர்த்தானந்தர் தெரிவிப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

எமது மனதிலுள்ள அகப்பேய்கள் அகற்றப்படவேண்டும். ஆம், கோபம்பொறாமை ஆசைகள் அகற்றுவோமானால் நிம்மதி உண்டாகும். இறைவனை அடையலாம்.

இவ்வாறு தஞ்சாவூர் இராமகிருஷ்ண மடத்தின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி விமூர்தானந்தஜி மஹராஜ் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் சமய சொற்பொழிவு நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

தஞ்சாவூர் இராமகிருஷ்ண மடத்தின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி விமூர்தானந்தஜி மஹராஜ் வியாழக்கிழமை மாலை மேற்படி ஆலயத்திற்கு விஜயம் செய்தார். சுவாமிகளுடன் மற்றுமொரு இகிமி.சுவாமி மாத்ருசேவானந்த ஜீ மகராஜ்ஜும் வருகை தந்தார்.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ மு.கு.சச்சிதானந்தமூர்த்தி குருக்கள் முன்னிலையில் ஆலயபரிபாலனசபைதலைவர் இ.மேகராஜா( அதிபர்) தலைமையில் இந் நிகழ்வு நடைபெற்றது.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த 10 நாள்களாக இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று வருகின்றேன். அழகானஆலயங்கள். இலங்கையில்இத்தனை பேராபத்து பெரும் போர் இடம்பெற்று பாரிய இழப்புஇடம்பெற்றிருந்தபொழுதிலும்இன்றும் மக்கள் சமய நம்பிக்கையில் நிறைவாக இருக்கின்றார்கள்.


உண்மையில்சமயம்தான்ஒருசமூகத்தின் முதுகெலும்பு. இலங்கையில்இறைநம்பிக்கை அதிகமாக உள்ளது.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தானாக இவ் ஆலய மூர்த்தி தோன்றியிருந்தாலும் நானூறு ஒரு வருடங்களுக்கு முன்பு தான் அது மக்களால் இனங்காணப்பட்டதாக இங்குள்ள பிரதமகுரு சொன்னார். என்னே அதிசயம்! என்னே அற்புதம்!! இதுதான் இவ்வாலயத்தின் சிறப்பு. - என்றார்.

ஸ்ரீமத் சுவாமி விமூர்தானந்தஜி தற்கால இளைஞர்கள் மாணவர்கள், ஆசிரியர்கள், பக்தர்கள் மற்றும் அனைவருக்குமான எழுச்சிமிகு சொற்பொழிவுகளை வழங்கி அவர்களின் சுயமுன்னேற்றத்துக்கான

சிந்தனைகளைத்தூண்டக்கூடிய வகையில் உரையாற்றினார். இ.கி.மிசன் பிரமுகர்களான எஸ்.செல்வநாயகம் முன்னாள் தவிசாளர் சிவ.அகிலேஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

முன்னதாக ஆலய பூஜையில் பங்கேற்றசுவாமிகள்சிலமணிநேரம் தங்கியிருந்து விடைபெற்றார்.(05)










இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.08.2024இல் வெளியிடப்பெற்றது